**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.261/2025**

**வா.சா.–1 – சபரிநாதன், த/பெ.பாபு**

**நாள். 19.08.2026**

**வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

தாவா வழக்கில் தாக்கல் செய்த தாவா மற்றும் பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையெழுத்திட்டேன். வழக்கின் பிரதிவாதி குறிப்பாக எங்கே உள்ளார் என்பது தெரியுமா என்றால் தெரியும், மௌன்ஸ்புரம், திண்டுக்கல் மார்க்கெட்டில் உள்ளார். பிரதிவாதி என்ன தொழில் செய்கிறார் என்றால் நூற்பாலை மில் வைத்திருக்கிறார். பிரதிவாதி எந்த தேதியில் என்னிடம் பணம் கேட்டார் என்றால் டிசம்பர் மாதம் 2023 ல் பணம் கேட்டார்.பிரதிவாதிக்கும் எனக்கும் எவ்வாறு பழக்கம் என்றால் நான் கன்ஸ்டிரக்சன் தொழிலில் இருந்து வருவதால் மயில்வாகனன் என்பவர் மூலமாக பழக்கம். பிரதிவாதிக்கு நான் எங்கு வைத்து யார் முன்பு பணம் கொடுத்தேன் என்றால் என் வீட்டில் மயில்வாகனன் முன்பு வைத்து பணம் கொடுத்தேன். நான் கொடுத்த பணத்தை வங்கியில் இருந்து எடுத்து வைத்திருந்தேனா என்றால் சேமித்து வைத்திருந்தேன். நான் கொடுத்த பணத்திற்கு 2023 ல் வருமான வரி கட்டியிருந்தேனா என்றால் ஆடிட்டரைத்தான் கேட்க வேண்டும். நான் கன்ஸ்டிரக்சன் தொழில் செய்வதற்கு ஆதரவாக தாவாவில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கொடுத்ததாக சொல்லும் பணம் என்ன வகை நோட்டுக்களாக கொடுத்தேன் என்றால் ரூ.500 கட்டுக்களாக கொடுத்தேன், எவ்வளவு கட்டுகள் கொடுத்தேன் என்றால் 20 பண்டல்களாக கொடுத்தேன். மேற்படி விசயங்களை பிராதிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி பணத்திற்கு ஆதரவாக எனக்கு பிரதிவாதி அவரது மில் புரொப்பரேட்டரி என்ற முறையில் செக் கொடுத்தார். அது திண்டுக்கல் கரூர் வைஸ்யா வங்கி செக் ஆகும். என்னிடம் காட்டப்படும் செக்தான் அது (வா.சா.ஆ.1). அந்த செக்கில் நிரப்பியுள்ள கையெழுத்து வெவ்வேறு மைகளால் உள்ளது என்றால் சரிதான். மேற்படி செக்கிற்கு எவ்வளவு நாட்கள் உயிருள்ளது என்றால் 3 மாதம் என உள்ளது. அந்த செக் 2010 ம் வருடம் அச்சடிக்கப்பட்டதாகும். மேற்படி செக் Pay check தான். அந்த செக்கை வங்கியில் கலெக்சனுக்கு போட்டேனா என்றால் வங்கியில் உள்ள அதிகாரியிடம் கொடுத்தேன். நான் கொடுத்த சலான் வா.சா.ஆ.2. என்றால் சரிதான். கரூர் வைசியா வங்கியில் எனக்கு ஜுன் மாதம் கொடுத்த குறிப்பாணையில் Please refer to drawer என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பிரதிவாதிக்கு கொடுத்த அறிவிப்பில்

அனைத்து விசயங்களையும் சொல்லித்தான் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். 02.01.2024 ல் தான் பிரதிவாதி என்னிடம் பணம் கேட்டதாக அறிவிப்பில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பைனான்ஸ் நடத்தும் மயில்வாகனின் நண்பர் ராஜா என்பவரை தெரியும். மேற்படி பைனான்ஸ் நிறுவனத்தில் வேலை செய்கிறேனா என்றால் இல்லை. இதற்கு முன்பு சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் பாலகிருஷ்ணன் என்பவர் மீது வேறொரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ல் உள்ள கையெழுத்தை மற்றும் இங்க் சம்மந்தமாக சரிபார்க்க கையெழுத்து நிபுணரிடம் அனுப்ப எனக்கு ஆட்சேபணையில்லை. பாலமுருகன் எனக்கு அனுப்பிய பதில் அறிவிப்பை நான் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா வழக்கில் தாக்கல் செய்த ரிட்டன் ஸ்டேட்மெண்ட்டை நான் படித்துப் பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அதில் ராஜாவும், பிரதிவாதியும் 15 வருடங்களாக பழக்கம் இருந்ததாக சொல்லியுள்ளார் என்றால் தெரியாது. எதிருரையில் ராஜா வாங்கிய 4 சக்கர வாகனத்தை 2018 ம் வருடம் பிரதிவாதியிடம் ரூ.7 லட்சம் வாங்கியதற்கு ஆதரவாக பிரதிவாதியிடம் 2 புரோநோட்டு , எழுதப்படாத 5 காசோலைகள் பெற்றுள்ளார் என்றும் அந்த வாகனத்திற்கு ரூ.12 லட்சத்து 50 ஆயிரம் அந்த கணக்கை முடித்துக் கொண்டதாக சொல்லியுள்ளார் என்றாலும் வாதி அசல் காசோலைகளை எங்கோ வைத்திருக்கிறேன் என சொல்லியும் பின்னர் தேடி தருவதாக எதிருரையில் சொல்லியுள்ளாரா என்றால் அவ்வாறு சொல்லியுள்ளார், அவ்வாறு வரவு செலவு இல்லை. என்னுடைய அறிவிப்பில் பிரதிவாதியின் வங்கை கணக்கை முடக்கி செயலற்றதாக ஆகியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி என்னிடம் எந்த தேதி, எந்த வருடம், எந்த மாதத்தில் என்னை அணுகி தொகை கேட்டார் என்று வாதி பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் டிசம்பர் 2023 என சொல்லியுள்ளேன். நான் இந்த வழக்கை தூயகரங்களுடன் அணுகவில்லை என்றாலும் பிரதிவாதியின் பதில் அறிவிப்பை வேண்டுமென்றே மறைத்ததால் இந்த வழக்கை நான் தூயகரங்களுடன் அணுகவில்லை என்றால் சரியல்ல. தாவா காசோலை 2009 ம் வருடமே நிறுத்தப்பட்டு தற்போது CTC காசோலைகள் நிறுத்தப்பட்டுள்ளது என்றாலும் மேற்படி காசோலையால் பிரதிவாதியால் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் ராஜாவின் பைனான்சில் வேலை பார்ப்பதால் அவருக்கு ஆதரவாக வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதிக்கும் சட்டப்படியான வரவு செலவு இல்லை என்றால் அவசர செலவு என கேட்டதால் கொடுத்தேன். அதற்காக எதாவது நோட்டு பராமரித்தேன் என்றால் இல்லை. பிரதிவாதி என்னிடம் கடன் கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் பணம் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதி இல்லை என்றாலும் சரியல்ல. நான் வழக்கில் ஆவணங்களை உற்பத்தி செய்து தாக்கல்

**செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ராஜாவிற்கு ஆதரவாக சாட்சியம் அளிப்பதற்காக வேலை பார்க்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.**

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.08.19 19:57:43 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.